செ.வெ.எண்.380/2009, நாள்:9-11-2009

**கொட்டும் மழையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஓரிக்கை, திருக்காலிமேடு ஆகிய பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், ஏரிகளுக்கு நீர்வரத்து வந்து கொண்டு இருக்கின்றன. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மழையால் பாதிக்கப்பட்ட ஓரிக்கையில் உள்ள பாரதிதாசன் தெரு, அண்ணாநகர், முல்லைநகரில் உள்ள மல்லிகை தெரு, குறுக்கு தெரு ஆகிய பகுதிகளை திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கொட்டும் மழையில் சென்று பார்வையிட்டார். மழையின் காரணமாக ஓரிக்கை ஏரி நிரம்புவதால் அருகில் உள்ள வீடுகளில் மழைநீர் கசிந்து உள்ளே வருகின்றன. அவற்றை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக மழைநீர் வெளியேறும் வகையில் அந்தப் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் திருக்காலி மேடு பகுதிக்கு சென்று மஞ்சள் நீர் கால்வாய் வழியாக மழைநீர் நத்தப்பேட்டை ஏரிப்பகுதிக்கு செல்லும் இடங்களைப் பார்வையிட்டார். அல்லாபாத் ஏரிக்கு செல்லும் மதகு அடைப்பு ஏற்பட்டுள்ளதை உடனடியாக சரிசெய்யுமாறு நகராட்சி ஆணையர் திருமதி.மகாலட்சுமி தேவி மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிக்கு உத்திரவிட்டார். நேதாஜி நகர், மஞ்சள்நீர் கால்வாய் மதகு, கோனேரிக்குப்பம் மின்நகர் கால்வாய் பகுதிகளை உடனடியாக தூர்வாரி சரிசெய்யுமாறு நகராட்சி ஆணையர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார். உடன் இயக்குநர் ஊராட்சிகள் திரு.செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.குமாரசாமி, காஞ்சிபுரம் வட்டாட்சியர் திரு.ஜோதிபிரகாசம், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உடனிருந்தார்கள்.





செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.